**இலங்கை றக்பி நிறுனம் - 2023**

**---------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

இலங்கை றக்பி நிறுவனத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் 1993 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க விளையாட்டுகள் சட்டத்தின் பிரிவு 21 A (திருத்தப்பட்ட) என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இலங்கை ரக்பி நிறுவனத்தின் நிதி கூற்றுக்கள் தொடர்பில் நான் ஓர் கருத்தும் தெரிவிக்கவில்லை. ஏனெனில் இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் காரணத்தாலாகும். இந்த நிதி கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்க போதுமான பொருத்தமான கணக்காய்வு ஆதாரங்களை என்னால் பெற முடியவில்லை.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் நான் மறுப்பு அபிப்பிராயத்தினை வெளிப்படுத்துகின்றேன்.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் கணக்காய்வின் நோக்கெல்லை பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, இலங்கை றக்பி நிறுவனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது இலங்கை றக்பியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

இலங்கை றக்பி நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் இலங்கை றக்பி நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைவாக இலங்கை றக்பியின் நிதிக்கூற்றுக்களில் கணக்காய்வு ஒன்றை மேற்கொள்வதும் கணக்காய்வாளரின் அறிக்கையை வெளியிடுவதும் எனது பொறுப்பாகும். இருப்பினும், உரிமை மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விவரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக, இந்த நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்க போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு ஆதாரங்களை என்னால் பெற முடியவில்லை.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை றக்பியின் மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள் அதன் மொத்த நடைமுறைச் சொத்துக்களை ரூபா 39,209,383 ஆல் விஞ்சியுள்ளதுடன், மீளாய்வு ஆண்டின் இறுதியில் உள்ளவாறு மொத்தப் பொறுப்புக்கள் அதன் மொத்தச் சொத்துக்களை ரூபா 40,365,299 வினால் விஞ்சியுள்ளன. மேலும், திரண்ட நிதியத்தின் எதிர்மறை மீதி 2023 டிசம்பர் 31 ஆம் திகதியளவில் அதன் மொத்த சொத்துக்களை ரூபா 25,030,520 ஆல் விஞ்சியுள்ளதை கணக்காய்வு வெளிப்படுத்தியது, இது இலங்கை ரக்பியின் தொடர்ந்து இயங்கும் தன்மை மீதான பாரியளவான நிச்சயமற்ற தன்மையை குறிக்கிறது. இருப்பினும், நிதிக் கூற்றுக்களில் அது வெளிப்படுத்தப்படவில்லை. | கருத்துரைகள் பெறப்படவில்லை. | இலங்கை ரக்பி நிறுவனமானது நிதிக்கூற்றுக்களில் தொடர்ந்து இயங்கும் தன்மைக்கான அதன் திறனை உறுதிப்படுத்த வேண்டும். |

### 1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களின் தொடர்புகளுடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பயனுள்ள ஆயுட்காலம் அல்லது தேய்மானம் அடையக்கூடிய சொத்தின் தேய்வு வீதம் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களின் 17 ஆம் பாகத்தின் 17.31 ஆம் பந்தியின் படி (சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான SLFRS) வெளிப்படுத்தப்படல் வேண்டும். இருப்பினும், தளபாடங்கள் மற்றும் பொருத்துதல்களுக்கான பயனுள்ள ஆயுட்காலம் அல்லது தேய்மான விகிதம் நிதிக் கூற்றுக்களில் வெளியிப்படுத்தப்படவில்லை.<br>மேலும், நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள விளையாட்டு உபகரணங்களின் தேய்மானத் தொகைக்கும், கணக்காய்விற்கு வழங்கப்பட்ட கணக்கீட்டு | கருத்துரைகள் பெறப்படவில்லை. | கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கியொழுகுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| அட்டவணைக்கும் இடையே ரூபா 11,622 வித்தியாசம் கண்டறியப்பட்டுள்ளது. | | |
| (ஆ) மீளாய்வு ஆண்டில் சட்டக் கட்டணமாக ரூபா 330,000 ஏற்பட்டிருந்த போதிலும், அறிக்கையிடல் திகதியில் நிலவிய சட்ட வழக்குகள் மற்றும் கடப்பாடுகள் பற்றிய விபரங்கள் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களின் (சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான SLFRS) பிரிவு 21 இன் நியதிகளின் கீழ் எதிர்பாராத நிகழ்வுகளின் கீழ் வெளிப்படுத்தப்படவில்லை. | மேற்கூறியவாறு | மேற்கூறியவாறு |

## 1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 03 வருட காலப்பகுதிக்குள் மீளச் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் 2017 டிசம்பர் 07 ஆம் திகதி தனியார் வர்த்தக வங்கியொன்றிடமிருந்து ரூபா 5 மில்லியன் பெறுமதியான நீண்டகால கடனொன்று பெறப்பட்டிருந்தது. இருப்பினும், இந்த கடனை திருப்பிச் செலுத்துவது 2020 மே முதல் தவறவிடப்பட்டிருந்தது. இதன்படி, 2020 மே மாத இறுதியில் உள்ளவாரான நிலுவை ரூபா 1,362,221 கடன் மீதியை ஆண்டுக்கு 03 சதவீத சாதாரண வட்டி மற்றும் 04 சதவீத தண்ட வட்டியுடன் தீர்க்க வேண்டும். எவ்வாறாயினும், இலங்கை ரக்பி 2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறான உண்மையான பொறுப்பினை வெளிப்படுத்துவதற்குப் பதிலாக, 2020 மே 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிலுவையில் உள்ள ரூபா 1,362,221 இனை மாத்திரமே நிதிக் கூற்றுக்களில் ஒரு பொறுப்பாகக் காட்டியுள்ளது. | கருத்துரைகள் பெறப்படவில்லை. | உண்மையான பொறுப்பு நிதிக்கூற்றுக்களில் வெயிப்படுத்தப்பட வேண்டும். |

## 1.5.4 அனுமதியற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஒவ்வொரு கொடுப்பனவுச் சீட்டும் அங்கீகாரமளிக்கும் அலுவலர் மற்றும் அத்தட்சிப்படுத்தும் அலுவலரால் கையொப்பமிடப்படல் வேண்டும். இருப்பினும், கூட்டு மொத்தம் ரூபா 17,008,285 இனை கொண்ட 142 கொடுப்பனவு பற்றுச்சீட்டுகள் அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தர்களினால் | கருத்துரைகள் பெறப்படவில்லை. | ஒவ்வொரு கொடுப்பனவுச் சீட்டிலும் அனுமதி வழங்கும் உத்தியோகத்தர் மற்றும் சான்றுப்படுத்தும் அலுவலரினால் கையொப்பமிடப்பட்டுள்ளதா என்பதை |

| | | |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்டு சான்றுப்படுத்தப்படவில்லை. எனவே, இந்த கொடுப்பனவுகளின் உண்மைத்தன்மையை கணக்காய்வினால் கண்டறிய முடியவில்லை. | | உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.5.5 கணக்காய்விற்கான ஆவணச் சான்றின்மை**

| விடயம் | தொகை ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) சட்ட கட்டணம் | 7,412,949 | ரசீதுகள், பற்றுச்சீட்டுகள் மற்றும் ஒப்புகைகள் போன்றவை. | கருத்துரைகள் பெறப்படவில்லை. | |
| (ஆ) முற்பணங்கள் | 2,812,450 | கொடுப்பனவு பற்றுச்சீட்டுக்கள், உறுதிப்படுத்தும் ஆவணங்கள் மற்றும் முற்பணப் பதிவேடு. | மேற்கூறியவாறு | தேவையான ஆதாரங்களை கணக்காய்வுக்கு சமர்ப்பிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |
| (இ) கொள்கைத் தீர்மானங்களின் அமுலாக்கத்தின் செயலாற்றல். | - | நிறைவேற்று குழுவின் கூட்டக் குறிப்புகள் மற்றும் அதன் செயலாற்றல். | மேற்கூறியவாறு | |

**1.6 பெற வேண்டியவை மற்றும் செலுத்த வேண்டியவை**

**1.6.1 பெற வேண்டியவைகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பெறப்படவேண்டிய மீதி ரூபா 1,882,343 தொகை மீளப்பெறப்படாமல் 01-02 வருடங்களுக்கு இடைப்பட்ட காலமாக அறவிடப்படாமல் நிலுவையாகியிருந்தது. 2023 டிசம்பர் 31 ஆம் திகதி உள்ளவாறு 02 மாகாண சங்கங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 1,249,442 பெறுமதியான முற்பணங்கள் 05 வருடங்களுக்கு மேலாக தீர்க்கப்பட்டிறாததுடன் அவற்றை மீளப்பெறுவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | கருத்துரைகள் பெறப்படவில்லை. | பெற வேண்டியவை மற்றும் மீளப்பெற தவறிய முற்பணங்களை அறவிட உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.6.2 செலுத்த வேண்டியவைகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2023 டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறான கடன்கொடுத்தோரின் மீதிகள் ரூபா 2,129,100 மற்றும் ரூபா 32,959,023 ஆகிய தொகைகள் முறையே 01-02 ஆண்டுகள் மற்றும் 03 வருடங்களுக்கு மேலாக தீர்க்கப்படாமல் இருந்தன. | கருத்துரைகள் பெறப்படவில்லை. | கடன் கொடுத்தோரின் மீதியை கொடுத்து தீர்க்க, தற்போதுள்ள பொறுப்புக்கள் ஆராயப்பட்டு அதற்கேற்ப கையாள வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 53,000 மற்றும் ஊழியர் நட்டஈடு ரூபா 1,000,000 ஆகியவை முறையே 2020 ஆம் ஆண்டு தொடக்கமும் மற்றும் 2021 இலும் கொடுத்து தீர்க்கப்படாமல் இருந்தன. | மேற்கூறியவாறு | ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு உரிய திகதியில் கொடுப்பனவு செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்பதுடன், தொழிலாளர்களின் நட்டஈட்டுத் தொகையைச் செலுத்துவதற்கும் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். |
| (இ) இலங்கை றக்பி அமைப்பின் அப்போதைய தலைவரிடமிருந்து பெறப்பட்ட ரூபா 6,700,000 நிறுவனத்தில் நிலவிய நிதிக் கட்டுப்பாடுகள் காரணமாக அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட திகதி வரை கூட அவருக்கு திருப்பிச் செலுத்தப்படவில்லை. | மேற்கூறியவாறு | நிலுவைத் தொகையை கொடுத்து தீர்க்க உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2016 ஒக்டோபர் 27 ஆம் திகதிய 1990/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2016 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க தேசிய விளையாட்டு ஒழுங்குவிதிகள். | | | |
| (i) பகுதி III இன் பிரிவு (xi) | தற்போதைய சர்வதேச தரப்படுத்தல், குறித்த காலப்பகுதிக்குள் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் மற்றும் செயலாற்றுகையை மேம்படுத்துவதற்கான உபாயங்கள் உள்ளடங்கலாக 10 வருட காலப்பகுதிக்கான ஓர் ஒன்றினைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரைகள் பெறப்படவில்லை. | செயல்திறனை மேம்படுத்துவதற்கான இலக்குகள் மற்றும் தந்திரோபாயங்கள் உட்பட 10 வருட காலத்திற்கு ஒரு ஒன்றினைந்த திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) பகுதி III இன் பிரிவு (xii) | அடுத்த வருடத்திற்கான வருடாந்த செயற்பாட்டுத் திட்டமொன்றை தயாரிக்க வேண்டும் எனவும், குறித்த செயற்பாட்டுத் திட்டம் நடப்பு வருட இறுதியிலிருந்து 03 மாதங்களுக்கு முன்னர் விளையாட்டுத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் கூறப்பட்ட போதிலும், அது அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | கருத்துரைகள் பெறப்படவில்லை. | அடுத்த ஆண்டுக்கான வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டு விளையாட்டுத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (iii) பகுதி III இன் பிரிவு (xv) | கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களுடன் ஆண்டறிக்கை அதனுடனான கணக்காய்வு அறிக்கை வருடாந்த பொதுக் கூட்டத்தில் அல்லது விசேட பொதுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையை சமர்ப்பிக்க இலங்கை ரக்பி நிறுவனம் நடவடிக்கை எடுக்கவில்லை. | கருத்துரைகள் பெறப்படவில்லை. | 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான வருடாந்த அறிக்கைகள் வருடாந்த பொதுக் கூட்டத்தில் அல்லது விசேட பொதுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) விளையாட்டு பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட 2022 திசெம்பர் 17 ஆம் திகதிய DSD/NSA/COM ஆம் இலக்க தேசிய விளையாட்டுச் சங்கங்கள் மீதான வழிகாட்டிகள். | | | |
| i. வழிகாட்டிகள் 3(iii) | அதிகபட்சமாக 02 வங்கிக் கணக்குகளை மாத்திரம் பேண முடியும் என்பதுடன், 02 வங்கிக் கணக்குகளுக்கு மேற்பட்ட கணக்குகளை பேண வேண்டுமாயின் அது விளையாட்டுத்துறை பணிப்பாளர் நாயகத்திற்கு எழுத்து மூலமாக அறிவிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் அதற்கு முரணாக, இலங்கை ரக்பி 04 வங்கி நடைமுறைக் கணக்குகளை பேணி வந்துள்ளது. | கருத்துரைகள் பெறப்படவில்லை. | உரிய அனுமதிகளைப் பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| ii. வழிகாட்டிகள் 3(xiv) | ஒவ்வோர் வருட இறுதியிலும் உள்ளவாறு நிலையான சொத்துக்கள் மற்றும் இருப்புக்கள் தொடர்பாக இருப்பு கணக்கெடுத்தல் செய்யப்பட வேண்டியதுடன் தொடர்புடைய அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும், 2023 டிசம்பர் 31 ஆம் திகதி உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 3,707,087 பெறுமதியான நிலையான சொத்துக்கள் மற்றும் ரூபா 700,981 பெறுமதியான இருப்பு மீதான கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படவில்லை. | கருத்துரைகள் பெறப்படவில்லை. | இருப்புச் கணக்கெடுத்தலை நடாத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 4,456,249 பற்றாக்குறையாகவும், அதற்கு முந்தைய ஆண்டில் ஏற்பட்ட பற்றாக்குறை ரூபா 3,810,997 ஆகவும் இருந்தது. இதனால், நிதி பெறுபேறுகளில் ரூபா 645,252 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் செலவினம் ரூபா 47,370,972 குறைந்திருந்த நிலையில், வருமானம் ரூபா 56,846,733 ஆல் குறைந்ததே வீழ்ச்சிக்கான காரணமாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வங்கி கணக்கினக்க கூற்றின் படி, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட ரூபா 817,926 மதிப்புள்ள 15 காசோலைகள் 2024 செப்டம்பர் 30 இல் உள்ளவாறு கூட சமர்ப்பிக்கப்படவில்லை. எனினும் அவற்றை நிறுவனத்தின் வருமானமாக வெளிப்படுத்த நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. | கருத்துரைகள் பெறப்படவில்லை. | 06 மாதங்களுக்கு மேற்பட்ட சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் வருமானமாக வெளிப்படுத்தப்பட வேண்டும். |

### 3.2 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 04 சந்தர்ப்பங்களில் ரூபா 1,026,340 பெறுமதியான பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக பின்பற்றப்பட்ட பெறுகை வழிகாட்டல்கள் 2020 மார்ச் 10 ஆம் திகதிய | கருத்துரைகள் பெறப்படவில்லை. | பொருட்கள், வேலைகள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்வதற்கு பெறுகை வழிகாட்டுதல் |

| | | |
|---|---|---|
| 2166/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் 11 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக கானப்பட்டன. | | பின்பற்றப்பட வேண்டும். |

## 4. கணக்களிதன்மை மற்றும் நல்லாட்சி

### 4.1 நிதிக் கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2016 ஒக்டோபர் 27 ஆம் திகதிய 1990/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட 2016 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க தேசிய விளையாட்டு ஒழுங்குவிதிகளின் மூன்றாம் பகுதியின் பிரிவு (xiii) இற்கு அமைவாக குழுவினால் சான்றுப்படுத்தப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 2024 பெப்ரவரி 28 ஆம் திகதிக்கு முன்னர் ஒவ்வொரு நிதியாண்டு முடிவடைந்ததிலிருந்து 02 மாதங்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஆனால் 2023 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் சுமார் 06 மாதங்கள் தாமதிக்கப்பட்டு 2024 ஆகஸ்ட் 28 அன்றே கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டன. | கருத்துரைகள் பெறப்படவில்லை. | ஒவ்வொரு நிதியாண்டு முடிவடைவதிலிருந்து 02 மாதங்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |